# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW7

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Caste | : |
| S/o.W/o.D/o. | : சண்முகம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 03.12.2024.

A1 present. A2 absent. petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் காமலாபுரம் மேல்தெருவில் குடியிருக்கிறேன். நான் கட்டிட வேலையில் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். 22.12.2014 அன்று காலை 9.30 மணிக்கு புதிய பேருந்து நிலையத்திலிருந்து மல்லூருக்கு கொத்தனார் வேலைக்கு செல்வதற்காக நான், என் மனைவி பூர்ணிமா, அம்மா அலமேலு, மூவரும் ஜோதி பேருந்தில் ஏறினோம். மல்லூர் செல்வதற்கு முன்பாக சந்தியூர் பிரிவில் சுமார் 10.00 மணி அளவில் எங்கள் பேருந்திற்கு முன்னால் ஒரு லாரி நாமக்கல்

பக்கமிருந்து சேலம் நோக்கி வந்த மணலுடன் கூடிய டிப்பர் லாரி எண்.TN 29 AK 6428 என்ற லாரி நாங்கள் சென்ற பேருந்திற்கு இடதுபுறம் அதிவேகமாகவும் ரோட்டின் நடுவில் இருந்த சென்டர் மீடியன்களை இடித்துவிட்டு நாங்கள் வந்த பேருந்தின் மீது மோதியது. அதனால் என் மனைவி, மற்றும் என் அம்மாவிற்கும் அடிபட்டது. என் அம்மாவிற்கு காயம் ஏற்பட்டது. என் மனைவிக்கு தலை நசுங்கி குடல் வெளியே வந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். என் அம்மாவிற்கும் நிறைய அடிபட்டு மயக்க நிலையில் இருந்தார். பின்னர் 108 ஆம்புலன்சில் என் தாயாரை ஏற்றி சென்று சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன்.

அதன்பின்னர் எனது உறவினர்களுக்கு நான் போன் செய்து என் தாயாரை பார்த்துக்கொள்ள சொல்லிவிட்டு மீண்டும் விபத்து நடந்த இடத்திற்கு வந்தேன். அப்போது போலிசார் சம்பவம் குறித்து விசாரித்தார்கள். அதன்பின்னர் என் மனைவியின் பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சம்பவம் நடந்த போது நான் சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவத்தின்போது எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரி. பேருந்தில் என் மனைவியும் அம்மாவும் டிரைவர் சீட்டிற்கு அருகில்

இருந்தார்கள். நான் பஸ்சின் பின்புறம் வலதுபுறம் உட்கார்ந்திருந்தேன். சம்பவத்தின்போது என் மனைவி மற்றும் தாயார் பயணம் செய்த பேருந்தில் நான் பயணம் செய்யவில்லை என்றும் அவர்கள் எனக்கு நெருக்கமானவர்கள் என்பதால் சம்பவத்தின் போது உடனிருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயாரை மருத்துவமனையில் சேர்த்துவீட்டு மீண்டும் நான் சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தகவல் தெரிந்துதான் சம்பவ இடத்திற்கு வ்ந்தேன் என்றால் சரியல்ல. நான்தான் அவர்களை வேலைக்காக அழைத்து சென்றேன்.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.